11th July 1962]

ஜிப்சம் பலகைகள் (தயாரித்தல்)

***231 கேள்வி.—திரு. ஜே. மாதா கவுடர்:** கனம் கைத் தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருச்சி அருகே ஜிப்சம் பலகை தயாரிக்கும் தொழிற் சாலே ஏற்படுத்த திட்டமுண்டா?

(இ) இதற்கு எவ்வளவு மூலதனம்?

(உ) அத் தொழிற்சாலேயில் என்னென்ன உபபொருள்கள் தயாரிக்க முடியும்?

THE HON. SRI R. VENKATARAMAN: (அ) A few persons have applied to the Government of India for the grant of licence to establish factories for the manufacture of gypsum board in Tiruchirappalli district. Their applications are under the consideration of the Central Government.

(இ) Since the matter relates to private sector it is not possible to give the particulars.

(உ) Government have no information.

திரு. ஜே. மாதா கவுடர்: ஸார், இந்த ஜிப்சம் பலகையைத் தவிர வேறு ஏதாவது மூலப்பொருள்களைக் கொண்டு அங்கு ஒரு உதவித் தொழிலே நடத்துவதற்கு சாத்தியம் உண்டா என்று பரிசீலனை செய்து பார்க்கப்பட்டதா? அப்படி பரிசீலனை செய்து பார்த்து என்னென்ன மூலப்பொருள்கள் கிடைக்கின்றன என்றும் அதை வைத்துக்கொண்டு என்னென்ன தொழில்களை ஆரம்பிக்கலாம் என்றும் பரிசீலனை செய்து பார்த்தார்களா என் பதை அறிய விரும்புகிறேன். ஆகவே எந்தத் தொழில்களை ஆரம் பிக்க உத்தேசம் என்பதைப்பற்றியும் அறிவிக்க முடியுமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: இந்தக் கேள்வியில் ஜிப் சம் பலகையைப்பற்றித்தான் கேட்கப்பட்டிருக்கிறது. கனம் அங்கத்தினர் சொல்வதெல்லாம் புத்தகத்தைப் பார்த்து ஆராய்ச்சி செய்ய வேண்டியதாக இருக்கிறது. அது சர்க்காரால் முடியாது. ஏதாவது பொருள் கிடைக்கிறது என்று சொன்னால் அதைப் பற்றி தான் சர்க்கார் பரிசீலனை செய்யும். அதன் பிறகு தான் எந்த வித மான தொழில் ஆரம்பிக்கப்படும் என்று முடிவு செய்யப்படும். புத்தகத்தைப் பார்த்து ஆராய்ச்சி செய்யக்கூடியவைகளையெல் லாம் சர்க்காரால் செய்ய முடியாது. என்ன மூலப்பொருள்கள் கிடைக்கின்றன என்று சொன்னால் அவைகளை வைத்துக்கொண்டு என்ன தொழில்கள் ஆரம்பிக்க முடியும் என்பதைப் பார்த்து முடிவு எடுக்க முடியும்.

திரு. ஜே. மாதா கவுடர்: ஏதோ இந்தத் தொழில் தனியார் துறையில் ஆரம்பிப்பதாக இருந்தாலும்கூட அது இந்த மாநிலத்திற்கு பயன் தரக்கூடியதாக இருப்பதால் இந்த திட் டத்தை சீக்கிரத்தில் எடுத்து முடிப்பதற்கு மத்திய சர்க்காருக்கு

[11th July 1962

உடனடியாக இதைப்பற்றி சிபாரிசு செய்து தனிப்பட்டவர்களுக்கு கூடிய சீக்கிரத்தில் லைசன்சு வழங்குவதற்கு வற்புறுத்த சர்க்கார் முன் வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : தமிழ் நாட்டில் அமைப்ப தற்கு சர்க்கார் எந்த அளவில் உதவி செய்யவேண்டுமோ அந்த அளவில் உதவி செய்துகொண்டுதான் வருகிறார்கள்.

Houses for Harijans

* 232 Q.—Sri M. KARUNANITHI (on behalf of Sri K. A. MATHIALAGAN): Will the Hon. the Minister for Agriculture be pleased to state whether the Government of India have been approached for financial aid for the scheme to build houses for Harijans under the Third Five-Year Plan?

The Hon. Sri P. KAKKAN: Yes, Sir.

திரு. மு. கருணாநிதி : எவ்வளவு உதவி கேட்கப்பட்டது? என்ன பதில் அங்கிருந்து வந்திருக்கிறது என்பதை அறிய விரும்பு கிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : எவ்வளவு வீடுகள் கட்டுவது என்கிற கேள்விக்கு இடம் இல்லை என்று நினைக்கிறேன். மத்திய சர்க்காரில் வீடு கட்டும் திட்டத்தைப்பற்றி தெரிவிக்கும் போது மீண்டும் அதிகப்படியான தொகைவேண்டும் என்று கேட்கப்பட்டது. இந்த வீடு கட்டும் திட்டத்தின்கீழ் இன்னும் அதிகப்படியாகக் கொடுக்க முடியாது, அந்தப் பொறுப்பினை மாநில சர்க்காரே ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று அவர்கள் கூறியிருக்கிறார்கள். அப்படி இருந்தும் 1962-63-ல் ஆறு லட்சம் ரூபாய் ஷெட்யூல்ட் காஸ்ட்ஸ்க்கும், இரண்டு லட்சம் ரூபாய் ஆதி வாசிகளுக்கும் அந்த வகையில் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதை வைத்துக்கொண்டு அரிசனங்களுக்கு இடம் வாங்கிக்கொடுக்க வேண்டும் என்றுதான் அரசாங்கம் அக்கரை செலுத்திக்கொண் டிருக்கிறார்கள்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : வீடுகள் கட்டிக்கொடுக்கும் திட்டப்படி 200 குடும்பங்களுக்கு 20 வீடுகள் கட்டிக்கொடுப்பது என்று இல்லாமல், அப்படிக் கொடுப்பதால் அரிசனங்களிடையே அதிருப்தி ஏற்படுகிற காரணத்தினால் அப்படி வீடுகளைக் கட்டிக் கொடுக்காமல் அவர்களுக்கு அதிகப்படியான வீட்டு மனைக் கட்டுகளை வழங்க முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : அஸ்திவாரம் போட்டு அதற்குப் பிறகு உதவி செய்யலாம் என்று பார்த்தால் அதிகப்படியான செலவு ஆகிறது. அதற்குத்தான் மனைக்கட்டுகளை அதிகமாக கொடுக்க வேண்டும் என்று அரசாங்கம் முடிவுக்கு வந்திருக்கிறது.